

நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி வளாகத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் 79 வந்து சுதந்திர தின விழாவை முன்னிட்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர் அருளரசு, வங்கி மேலாண் இயக்குனர் சந்தானம் மற்றும் வங்கி இயக்குனர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 92 வது பிறந்த நாளை முன்னிட்டு, திருவாரூர் காட்டூரில் அமைந்துள்ள அஞ்சுகம் அம்மாள் நினைவிடத்தில் இருக்கிற முரசொலி மாறன் அவர்களின் திரு உருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ.மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். ஒன்றிய செயலாளர் சேகர்கலியபெருமாள் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கழக தோழர்கள் உடன் பங்கேற்று மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

### அமித்ஷா தமிழகத்திற்கு எத்தனை முறை வந்தாலும்

# தி.மு.க.தான் வெற்றி பெற்று தமிழகத்தை ஆட்சி செய்யும்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



புதுக்கோட்டை, ஆக.20-

தமிழக வெற்றி கழகத்தின் மதுரை மாநாடு எந்த வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது. அமித்ஷா தமிழகத்திற்கு வந்து எத்தனை யூகங்கள் அமைத்தாலும் திமுக வெற்றி பெற்று தமிழகத்தை ஆட்சி செய்யும் தமிழக மாணவர்கள் தான் அகில இந்திய அளவில் உயர் படிப்பில் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆளுநர் உணர வேண்டும்.

இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி

புதுக்கோட்டை மாவட்ட திமுக அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் முரசொலி மாறன் பிறந்த நாளை ஒட்டி அவரது படத்திற்கு அமைச்சர் எஸ். ரகுபதி தலைமையில் தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் எஸ். ரகுபதி

திருமாவளவனுக்கு என்றைக்குமே நாங்கள் வாழ்த்து சொல்ல கடமைப்பட்டவர்கள், அவர் எங்களோடு தோழமையில் உள்ளவர், அவருக்கு எங்களது இயக்கத்தின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் தமிழ்நாட்டில் இருக்கிறோம் என்கிறதே மறந்து விடுகிறார்.ஒரு மாநிலத்தின் ஆளுநர் என்பது மறந்துவிட்டு எப்போதுமே அவர் பேசுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

கல்வியில் இந்தியாவிலேயே முன்னேறி இருக்கக் கூடிய ஒரே மாநிலம் கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழகம் மட்டும்தான்.

அது அவருக்கு புரியாது ,தமிழக மாணவர்களின் நிலைமையை பற்றி தெரியாது, ஏனென்றால் அவருக்கு தமிழ் தெரியாது.

தமிழக மாணவர்கள் தான் அகில இந்திய அளவில் உயர் படிப்பில் சாதனை படைத்து கொண்டிக்கிறார்கள் என்பதை ஆளுநர் உணர வேண்டும்

பழிவாங்கும் எண்ணத்தோடு ED ரைடு நடந்துள்ளது, ஐ பெரியசாமியின் அரை சாவி வேண்டுமென்றால் வாங்கித் திறந்து அவர்கள் சோதனை நடத்தி இருக்கலாம்,ஏன் அவர்கள் பூட்டை உடைக்க வேண்டும், சட்டப்பேரவை செயலாளர் அனுமதி பெற்று தான் எம்.எல்.ஏ. விடுதிக்குள் நுழைய வேண்டும் அவர்கள் அனுமதி வாங்காமல் பேரவை விடுதிக்குள் நுழைந்துள்ளனர், நாங்கள் இதுபோன்ற எந்த ரைடுக்கும் அஞ்ச மாட்டோம்,எத்தனை ரெய்டுகள் வந்தாலும் நாங்கள் அதற்கு அஞ்சப் போவதில்லை சட்டப்படி சந்திப்போம்

யாரோட மாநாடும் எங்களுக்கு எந்த விதமான பாதிப்பையும் தாக்கத்தையும் ஏற்படுத்தாது,திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளே எங்களுக்கு வெற்றியை தேடி தரும்,அந்த மாநாட்டால் எங்களுக்கு எந்த பாதிப்பும் கிடையாது,பொன்னியின் செல்வன் போல எங்களது வெற்றிகள் தொடர்ந்து கொண்டே இருக்கும்,

தமிழகத்திற்கு எத்தனை முறை உள்துறை அமைச்சர் அமித்ஷா வந்தாலும் அதனால் எந்த பாதிப்பும் தி.மு.க. கூட்டணிக்கு ஏற்படப் போவது கிடையாது. தமிழகத்தில் அவர்கள் வளர முடியாது திராவிட முன்னேற்ற கழகம் தொடர்ந்து தமிழகத்தில் ஆட்சி செய்து கொண்டிருக்கும்.

# சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!



சேலம், ஆக. 20 -

சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம். செல்வகணபதி எம்.பி. எடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணல் வருகின்ற 23.08.2025 சனிக்கிழமை அன்று காலை 10 மணிக்கு, எடப்பாடி, நைனாம்பட்டியில் உள்ள ஸ்ரீ நடராஜன் மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

எனவே சேலம் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நகர, ஒன்றிய, பேரூர் கழகப் பொறியாளர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நுகர்வோர் மற்றும் மொத்த விலை குறியீடு பணவீக்க விகித இலக்கு மற்றும்

# சாதாரண குடிமக்கள் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!



நாமக்கல் ஆக 20-

நுகர்வோர் மற்றும் மொத்த விலை குறியீடு பணவீக்க விகித இலக்கு மற்றும் சாதாரண குடிமக்கள் மீதான பண வீக்கத்தை கட்டுப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ? என் மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

டெல்லி பாராளுமன்றத்தில் மாநிலங்களவை கூட்டத்தொடரில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்ட கடந்த மூன்று நிதி காலாண்டுகளுக்கான நுகர்வோர் விலைக் குறியீடு (CPI) மற்றும் மொத்த விலைக் குறியீடு (WPI) இரண்டாலும் அளவிடப்படும் தற்போதைய பணவீக்க விகிதம், இந்த புள்ளிவிவரங்கள் இந்திய ரிசர்வ் வங்கி (RBI) நிர்ணயித்த இலக்கு பணவீக்க விகிதத்துடன் எவ்வாறு ஒப்பிடுகின்றன ?

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும், சாதாரண குடிமக்கள் மீதான அதன் தாக்கத்தைக் குறைக்கவும், விலை நிலைத்தன்மையை அடைவதில் அவற்றின் செயல்திறன் ஆகியவற்றுடன், அரசாங்கமும் ரிசர்வ் வங்கியும், நிதி மற்றும் நிதி இரண்டாலும் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் என்ன? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய நிதி அமைச்சக அமைச்சர் பங்கஜ் சௌத்ரி

கடந்த மூன்று காலாண்டுகளுக்கான நுகர்வோர் விலைக் குறியீடு (CPI) மற்றும் மொத்த விலைக் குறியீடு (WPI) அடிப்படையிலான சராசரி பணவீக்க விகிதம் குறித்த தகவல்கள் அறிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

1934 ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கி சட்டத்தின் விதிகளின் கீழ், இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அதன் முதன்மை பணவியல் கொள்கை கட்டமைப்பாக நெகிழ்வான பணவீக்க இலக்கு கொள்கையைப் பின்பற்றுகிறது, இதன் மூலம் RBI நுகர்வோர் விலைக் குறியீட்டு (CPI) பணவீக்கத்தை (தலைப்பு பணவீக்கம்) 4% இல் ±2 சதவீத புள்ளிகள் சகிப்புத்தன்மை வரம்போடு (அதாவது, இலக்கு வரம்பு 2% முதல் 6% வரை) பராமரிக்க இலக்கு வைக்கிறது. கடந்த மூன்று காலாண்டுகளாக, CPI பணவீக்க விகிதம் RBI இன் சகிப்புத்தன்மை வரம்பான 4% + 2% க்குள் உள்ளது. WPI என்பது RBI க்கு குறிப்பாக இலக்கு வைக்கப்பட்ட பணவீக்க விகிதம் அல்ல.

அதேபோல பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும், பொது குடிமக்கள் மீதான அதன் தாக்கத்தைக் குறைக்கவும், நிதி மற்றும் வர்த்தகக் கொள்கை உள்ளிட்ட பல நிர்வாக நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொண்டுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான தாங்கல் இருப்புக்களை அதிகரித்தல், திறந்த சந்தையில் கொள்முதல் செய்யப்பட்ட தானியங்களின் விற்பனை, பற்றாக்குறை காலங்களில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுகளை எளிதாக்குதல் மற்றும் சந்தையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களின் அதிக விநியோகங்களைத் தள்ள இருப்பு வரம்புகளை செயல்படுத்துதல், பாரத் பிராண்டின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட உணவுப் பொருட்களின் மானிய விலையில் சில்லறை விற்பனை, எல்லாவற்றிற்கும் மேலாக, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சுமார் 81 கோடி பயனாளிகளுக்கு இலவசமாக உணவு தானியங்களை விநியோகித்தல் மற்றும் வருமான வரியிலிருந்து ஆண்டு வருமானம் 12 லட்சம் வரை (மற்றும் சம்பளம் பெறும் தனி நபர்களுக்கு 12.75 லட்சம்) விலக்கு அளிப்பதன் மூலம் தனிநபர்களின் செலவழிப்பு வருமானத்தை அதிகரித்தல் ஆகியவை இதில் அடங்கும். இந்த முயற்சிகளை நிறைவு செய்யும் வகையில், இந்திய ரிசர்வ் வங்கியின் நாணயக் கொள்கைக் குழு மே 2022 முதல் பிப்ரவரி 2023 வரை ரெப்போ விகிதத்தை 250 அடிப்படைப் புள்ளிகள் (4% முதல் 6.5% வரை) உயர்த்தியது, அதன் பிறகு ஜனவரி 2025 வரை அதை 6.5% ஆகப் பராமரித்தது.

இதன் விளைவாக, CPI ஆல் அளவிடப்படும் சராசரி ஆண்டுக்கு ஆண்டு சில்லறை பணவீக்கம், 2023-24 இல் 5.4 சதவீதத்திலிருந்து 2024-25 இல் 4.6 சதவீதமாகக் குறைந்தது, இது ஆறு ஆண்டுகளில் மிகக் குறைவு. சமீபத்திய தரவுகளின்படி, ஜூன் 2025 இல் சில்லறை பணவீக்கம் 2.1 சதவீதமாகக் குறைந்தது. பணவீக்கத்தில் ஏற்பட்ட பரந்த அளவிலான சரிவின் விளைவாகவும் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், ரிசர்வ் வங்கி பிப்ரவரி 2025 முதல் கொள்கை (ரெப்போ) விகிதத்தில் 100 அடிப்படைப் புள்ளி குறைப்பைக் கொண்டு வந்துள்ளது. இந்த ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் நிலையான பொருளாதார வளர்ச்சியுடன் பணவீக்கக் கட்டுப்பாட்டை சமநிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன என பதிலளித்தார்.

# ஆவடியில் திட்டப் பணிகள் தொடக்கம்!

திருவள்ளூர் ஆக.20-

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிக்குட்பட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கை மற்றும் அதிமுக ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டிருந்த திட்டப் பணிகளை, மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வண்ணமாக தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் பல்வேறு கட்டிடப் பணிகளை திறந்து வைத்து பல்வேறு திட்ட பணிகளை தொடங்கி வைத்தார்

ஆவடி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி மற்றும் பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிதியிலிருந்து 2 கோடி 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆவடி 40 வது வார்டில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் சித்தரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைக்க அடிக்கல் நாட்டினார்



கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தில் 2022–2023 விரிவான பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மருதநல்லூர் ஊராட்சியில், செந்தமிழ் நகரில், அழிவின் விளிம்பில் உள்ள வீடற்ற பழங்குடியினரான இருளர் இன மக்கள் 50 நபர்களுக்கு இலவச இடம் வழங்கி அதில் இலவச வீடு தலா ரூ.4,62,000/ மதிப்பீட்டில் கூடுதல் தொகை ரூ.2,31,00,000/ லட்சம் மதிப்பீட்டில் வீடுகள் கட்டப்பட்டு வரும் பணிகளையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணிகளையும் தஞ்சை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை .க.அன்பழகன் எம்.எல்.ஏ பார்வையிட்டார். அப்பகுதிக்கு அவரது சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10,00,000/ மதிப்பீட்டில் புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணியை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் உள்ளூர் டி கணேசன், ஜெ சுதாகர், மாவட்ட பிரதிநிதி டி.என்.கரிகாலன், மு.ஊ.ம.தலைவர் ரவி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஒன்றிய பொறியாளர்கள், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய குழு துணை தலைவர், ஒன்றிய குழு உறுபினர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### தலைமைக் கழகப் பேச்சாளர்

# பவானி எஸ்.கண்ணன் புதுமனை புகுவிழா!

## கழகத்தினர் பங்கேற்பு

ஈரோடு, ஆக.20-

தலைமைக்கழகப் பேச்சாளர் பவானி எஸ். கண்ணன் இல்ல விழாவில் கழகத்தினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இது பற்றிய விவரம்: தலைமைக் கழக பேச்சாளர் பவானி எஸ்.கண்ணன் புதுமனை புகுவிழா வருகிற 28.8.2025 வியாழக்கிழமையன்று காலை 6 மணிக்கு கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.கஸ்டாலின், இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் நல்வாழ்த்துக்களுடன் பவானி மேட்டூர் மெயின் ரோடு, ஊராட்சி கோட்டை ஸ்ரீ குமரன் கார்டனில் அமைந்துள்ள கலைஞர் இல்லம் புதுமனை புகுவிழாவில் மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள், ஆன்றோர்கள் சான்றோர்கள் பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை தலைமைக் கழக பேச்சாளர் எஸ்.கண்ணன் குடும்பத்தினர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் சிறப்பாக செய்து வருகின்றனர்.

# தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள் கூட்டம்

## தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு

தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் கூட்டம் 24.8.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11.00 மணி அளவில், கிருஷ்ணகிரி, "தேவராஜ் மகாலில்" எனது தலைமையில்;

கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா, எம்.பி., சிறப்புரையாற்றிட;

வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், எஸ்.மோகன் வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் மாலைராஜா, வி.ஜெயன், கோவை நா. முருகவேல், பி.டி. பாண்டிச்செல்வம், எஸ்.முத்துச்செல்வி, என். தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர் வர்த்தகர் அணித் துணைச் செயலாளர்கள் ஐ. கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ். அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், சிவகாசித. வனராஜ், வி.பி. மணி, இ.ராமர், க. தனசெல்வம், பெ. சுந்தரவரதன், வே. பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ.சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கே.வி.எஸ்.சீனிவாசன், கிருஷ்ணகிரி பி.டி.அன்பரசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட மற்றும் மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தலைவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்** : ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் வர்த்தகர் அணி பட்டியல் பெறுதல் மற்றும் கழக அணி வளர்ச்சி குறித்து.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை 18.
நாள் : 13.08.2025.

**காசி முத்துமாணிக்கம்,**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி



பெரம்பலூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே. அருண்,பொதுக்குழு உறுப்பினர் டி.கே.ராமச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,நூருல்ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், செ.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.